பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
03 04 2024 7 15
புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்கும் இலக்கை எட்டுவதற்குப் பிஜேபி-க்கு வாக்களிக்க வேண்டுமென்று அக்கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

2. அருணாச்சல பிரதேசத்தில் மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவை தேர்தல்களுக்கான அறிக்கையை காங்கிரஸ் வெளியிட்டுள்ளது.

3, பொதுத் தேர்தல் குறித்த உண்மையான தகவல்களை அறிந்து கொள்வதற்காக **Myth vs reality** என்ற தகவல் தளத்தை தேர்தல் ஆணையம் தொடங்கியுள்ளது.

4. எகிப்து நாட்டின் அதிபராக திரு **Abdel fattah Al sisi** தொடர்ந்து மூன்றாவது முறையாக பதவியேற்றுள்ளார்.

5, தாய்லாந்தின் புக்கெட்டில் நடைபெற்று வரும் உலகக்கோப்பை பளுதூக்கும் போட்டியில் இந்தியாவின் பிந்தியா ராணி தேவி வெண்கலப்பதக்கம் வென்றார்.

<u>*---- இனி விரிவான செய்திகள் --*</u>

**[]><<>><[]**

கடந்த 2014 மற்றும் 2019-ல் நடைபெற்ற மக்களவைத் தேர்தல்களைப் போலவே இந்த தேர்தலிலும் ராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள அனைத்து 25 தொகுதிகளிலும் பிஜேபி வெற்றிபெறும் என்று அக்கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

அம்மாநிலத்தில் **Kotputli** என்ற இடத்தில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான தேர்தல் இது என்பதை உணர்ந்து மக்கள் வாக்களிக்க வேண்டுமென்று கூறினார்.

ஊழலை வேரோடு ஒழிக்கவும், சுயசார்பு இந்தியாவை உருவாக்கி விவசாயிகளின் நலன்களை பாதுகாக்கவும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

காங்கிரஸ் இடம்பெற்றுள்ள **INDI** கூட்டணி நாட்டு நலனுக்காக செயல்படாமல் தங்கள் குடும்ப நலனுக்காகவே செயல்பட்டு வருவதாக அவர் குற்றம்சாட்டினார்.

கடந்த பத்து ஆண்டுகளில் தங்கள் கூட்டணி பல்வேறு தரப்பினரின் நலனுக்காகக் கொண்டு வந்த மக்கள் நலத் திட்டங்கள் மூலம் நாடு வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருப்பதாகவும் திரு நரேந்திரமோடி கூறினார்.

சுயசார்பு இந்தியா திட்டத்தில் 80-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பாதுகாப்பு தளவாடங்களை ஏற்றுமதி செய்து இந்தியா சாதனை படைத்துள்ளதாகவும் பிரதமர் குறிப்பிட்டார்.

**[]><<>><[]**

அருணாச்சல பிரதேசத்தில் மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களுக்கான தேர்தல் அறிக்கையை காங்கிரஸ் கட்சி நேற்று வெளியிட்டது.

அக்கட்சியின் மாநில தலைவர் திரு **Nabam tuki** நேற்று ஈட்டா நகரில் வெளியிட்டார்.

படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கித் தரப்படும் என்றும், ஆரம்பப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும் என்றும் தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகையை ரெட்டிப்பாக்குவது, ஒவ்வொரு மாவட்ட தலைநகரத்திலும் பல்நோக்கு சிறப்பு மருத்துவமனைகள் உருவாக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

பழைய ஓய்வூதியத் திட்டம் மீண்டும் கொண்டுவரப்படும் என்றும் காங்கிரஸ் உறுதியளித்துள்ளது.

**[]><<>><[]**

பொதுத் தேர்தல் குறித்த உண்மையான தகவல்களை மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் **Myth vs reality** என்ற தகவல் தளத்தை தேர்தல் ஆணையம் தொடங்கியுள்ளது.

பொதுமக்கள், அரசியல் கட்சிகள் மற்றும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் சரியான தகவல்களை தெரிந்து கொள்வதற்கு இந்த தகவல் தளத்தை பயன்படுத்தலாம்.

மேலும் சமூக வலைதளங்கள் போன்றவற்றில் தேர்தல் குறித்தும், தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைகள் குறித்தும் பரப்பப்படும் தவறான தகவல்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும் இந்த தகவல் தளம் பேறுதவியாக இருக்கும்.

**[]><<>><[]**

கோடை காலத்தில் மின் தேவையை பூர்த்தி செய்வதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

புதுதில்லியில் நேற்று இது தொடர்பாக மத்திய மின்துறை அமைச்சர் திரு ஆர் கே சிங் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அனல்மின் உற்பத்தி நிலையங்களில் போதிய அளவு மின் உற்பத்தியை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

தனியார் மின் உற்பத்தி நிறுவனங்களிடமிருந்து மின்சாரத்தைப் பெறுவது குறித்தும், தற்போது பயன்படுத்தப்படாமல் உள்ள ஐந்து புள்ளி இரண்டு ஹிகோவாட் மின் உற்பத்தி திட்டங்களை செயல்பாட்டுக்கு கொண்டு வருவது குறித்தும் இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இந்த கோடை காலத்தில் இயல்பு நிலையைவிட அதிக அளவு வெப்பத்தின் தாக்கம் இருக்கும் என இந்திய வானிலை ஆய்வுத்துறை தெரிவித்துள்ளதை அடுத்து, மின் தேவையை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மத்.திய மின்துறை அமைச்சகம் மேற்கொண்டுள்ளது.

**[]><<>><[]**

தில்லி முதலமைச்சர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் கைது செய்யப்பட்டதில் அனைத்து சட்ட நடைமுறைகளும் பின்பற்றப்பட்டதாக அமலாக்கப் பிரிவு நேற்று தில்லி நீதிமன்றத்தில் தெரிவித்தது.

மதுபான கொள்கை முறைகேடு மற்றும் சட்டவிரோத பணப்பரிமாற்றம் தொடர்பாக அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அமலாக்கப்பிரிவு தெரிவித்துள்ளது.

**[]><<>><[]**

மக்களவைத் தேர்தலில் முதல்முறை வாக்காளர்கள், வாக்களிப்பதை ஊக்குவிப்பதற்கு நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் இது தொடர்பான விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடைபெற்று வருகின்றன.

சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவர் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

*(சவுண்ட் பைட் - மாணவர் ) - 20 செகண்ட்ஸ்)*

**[]><<>><[]**

தமிழகத்தில் மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டது குறித்து விரிவான அறிக்கையை மாநில அரசு தாக்கல் செய்ய வேண்டுமென்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை, காஞ்சிபுரம் உள்ளிட்ட நான்கு மாவட்டங்களில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணத்தை வங்கிக் கணக்கில் செலுத்தக்கோரி தாக்கல் செய்யப்பட்ட பொதுநல மனுக்களை விசாரித்த தலைமை நீதிபதி திரு கங்கா பூர்வாலா, நீதிபதி திரு சத்ய நாராயணா பிரசாத் ஆகியோரைக் கொண்ட பெஞ்ச் இந்த உத்தரவை பிறப்பித்தது.

முன்னதாக இவ்வழக்கில் ஆஜரான மாநில அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் திரு ஜெ ரவீந்திரன், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களைச் சேர்ந்த 24 லட்சத்து 25 ஆயிரத்து 336 குடும்பங்களுக்கு தலா ஆறாயிரம் ரூபாய் நிவாரணம் கடந்த ஜனவரி மாதமே வழங்கப்பட்டு விட்டதாகத் தெரிவித்தார்.

நிவாரண உதவி தேவை என விண்ணப்பித்த மேலும் ஐந்து லட்சத்து 28 ஆயிரம் பேரின் மனுக்களும் பரிசீலிக்கப்பட்டு, நிவாரணம் வழங்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.,

[]><<>><[]

எல்லை பாதுகாப்புப்படையில் கலை மற்றும் கைவினைப் பொருட்கள் கண்காட்சி நேற்று புதுதில்லியில் தொடங்கியது.

வரும் வெள்ளிக்கிழமை வரை நடைபெறும் இந்த கண்காட்சியை காலை 11 மணி முதல் மாலை ஆறு மணி வரை பொதுமக்கள் பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

115-க்கும் மேற்பட்ட பி எஸ் எப் படை வீரர்கள் தங்களது கலைப்பொருட்களை இக்கண்காட்சியில் பார்வைக்கு வைத்துள்ளனர்.

[]><<>><[]

காஸாவில் மனிதாபிமான அடிப்படையில் உணவுப் பொருட்களை விநியோகம் செய்த வோல்டு சென்ட்ரல் கிச்சன் குழுவினர் மீது விமான தாக்குதல் நடத்தியதில் எந்த உள்நோக்கமும் இல்லை என்று இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நேதன்யாகு கூறியுள்ளார்.

இந்த தாக்குதலில் நிவாரணப் பணியில் ஈடுபட்ட ஆறு பேரும், பாலஸ்தீன நாட்டின் வாகன ஓட்டுநரும் கொல்லப்பட்டனர்.

ஹமாஸுக்கு எதிரான போர் நடவடிக்கையின்போது தவறுதலாக இந்த தாக்குதல் நிகழ்ந்ததாகவும், இந்த துயர சம்பவத்துக்கு ஆழ்ந்த வருத்தத்தை தாம் தெரிவிப்பதாகவும் திரு நேதன்யாகு கூறியுள்ளார்.

இதனிடையே காஸா பகுதியில் உணவுப் பொருட்கள் விநியோகம் செய்யும் பணியை நிறுத்தி வைப்பதாக வோல்டு சென்ட்ரல் கிச்சன் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேல் ராணுவத்தினர் ஒருங்கிணைந்து தங்களது நிவாரணப் பணியை காஸாவில் மேற்கொண்டதாகவும், ஆனால் தங்களது வாகனத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது துரதிருஷ்டவசமானது என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

கடல் மார்க்கமாகக் கொண்டுவரப்பட்ட 100 டன் உணவுப் பொருட்கள் காஸா-வுக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் காஸாவில் விநியோகிக்கும் பணி தடைபட்டுள்ளதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இந்த தாக்குதலுக்கு மன்னிப்பு கோருவதாக இஸ்ரேல் ராணுவம் கூறியுள்ளது.

தவறுதலாக நிகழ்ந்த இந்த தாக்குதல் குறித்தும், சூழ்நிலை குறித்தும் உலக நாடுகள் புரிந்து கொள்ள வேண்டுமென்று ராணுவம் கேட்டுக் கொண்டுள்ளது.

[]><<>><[]

எகிப்து நாட்டின் அதிபராக திரு **Abdel fattah Al sisi** மூன்றாவது முறையாக நேற்று மீண்டும் பதவியேற்றார்.

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற அதிபர் தேர்தலில் திரு சிசி 89 புள்ளி ஆறு சதவீத வாக்குகளுடன் வெற்றி பெற்றார்.

2030-ஆம் ஆண்டு வரை எகிப்து அதிபராக அவர் பதவியில் இருப்பார்.

[]><<>><[]

தாய்லாந்தின் புக்கெட்டில் நடைபெற்று வரும் உலகக்கோப்பை பளுதூக்கும் போட்டியில் 59 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் பிந்தியா ராணி தேவி வெண்கலப்பதக்கம் வென்றார்.

[]><<>><[]

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற பெங்களூரு அணிக்கு எதிரான ஆட்டத்தில் லக்னோ அணி 28 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

பெங்களூருவில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த லக்னோ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் ஐந்து விக்கெட் இழப்புக்கு 181 ரன் எடுத்தது.

182 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பெங்களூரு அணி 19 புள்ளி நான்கு ஓவரில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 153 ரன் மட்டுமே எடுத்து தோல்வியடைந்தது.

இன்று விசாகப்பட்டினத்தில் நடைபெறவுள்ள போட்டியில் தில்லி – கொல்கத்தா அணிகள் மோதுகின்றன.

[]><<>><[]

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் நேற்று புவனேஸ்வரில் நடைபெற்ற ஆட்டத்தில் ஒடிஸா அணி மூன்றுக்கு – ஒன்று என்ற கோல் கணக்கில் பஞ்சாப் அணியை வென்றது.

இன்று கொச்சியில் நடைபெறவுள்ள ஆட்டத்தில் கேரளா அணி - ஈஸ்ட் பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.

**[]><<>><[]**

காண்டிடேட்ஸ் செஸ் போட்டியின் தொடக்கவிழா கனடாவின் டோரோண்டோ நகரில் நேற்று நடைபெற்றது.

இதற்கான போட்டிகள் வரும் ஐந்தாம் தேதி தொடங்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் முன்னணி வீரர்களான பிரக்யானந்தா, குகேஷ், விதித் சந்தோஷ் குஜராத்தி, வைசாலி, கோனேறுஹம்பி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

***End of News***